**தம்புள்ள பிரதேச சபை**

**மாத்தளை மாவட்டம்**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

மீளாய்வாண்டிற்கும் 2012, 2013 போன்ற ஆண்டுகளுக்கும் உரிய நிதிக்கூற்றுக்கள் 2015 யூன் 30 ஆந் திகதி வரையிலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

**2. நிதி மீளாய்வு**

**2.1 வருமான நிர்வாகம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) பிரதேச சபை எல்லையில் தாபிக்கப்பட்ட தொலைத்தொடர்பு கோபுரங்களிலிருந்து மீளாய்வாண்டிற்குரிய ரூபா 54,000 அனுமதிப்பத்திரக் கட்டணமும், வியாபார விளம்பரம் மற்றும் அறிவித்தல் பதாதைகளிலிருந்து அறவிடவேண்டிய ரூபா 21,300 அனுமதிப் பத்திரக் கட்டணமும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சீகிரியா மோட்டார் வாகன தரிப்பிடத்திலிருந்து 07 மாதங்களுக்காக அறவிடவேண்டிய ரூபா 143,558 வாடகைப் பணம் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) தொழில்நுட்ப உத்தியோகத்தரினாலும் பொது சுகாதார பரிசோதகரினாலும் உரிய இடங்களில் களப் பரிசோதனை மேற்கொள்ளப்படாது ரூபா 70,540

பெறுமதியான 06 இணக்கச் சான்றிதழ்கள் மீளாய்வாண்டின் போது வழங்கப்பட்டிருந்தன.

(ஆ) 2013 ஆம் ஆண்டின் வருடாந்த பொருள் மெய்மையாய்வின் போது அலுவலக பொதுக் களஞ்சியத்தில் அவதானிக்கப்பட்ட 313 பொருள் அலகுகளின் பற்றாக்குறை தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) அரசாங்க விடுமுறை மற்றும் வார இறுதி நாட்களில் 1/20 அடிப்படையில் சேவையாற்றும் போது நாளொன்றிற்கு 8 மணித்தியாலங்கள் சேவையாற்ற வேண்டியிருந்தமையும், அத்தினத்திற்கு முன்னரும் பின்னருமான நாட்களில் கடமைகளில் ஈடுபட்டிருந்தமையும் உறுதிப்படுத்தப்படாமல் இலங்கைக் குடியரசின் தாபனவிதிக் கோவையின் VIII ஆம் அத்தியாயத்தின் 9.1, 10.1 மற்றும் 10.2 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கு முரணாக வேலை அத்தியட்சகருக்கு ரூபா 84,797 தொகை 1/20 படியாகக் செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) பல்வேறு நிறுவனங்களிலிருந்து கிடைக்கப்பெற்ற 03 வாகனங்களின் உரித்தை சபைக்கு கையேற்பதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு உருவாக்கப்பட்டிருந்த போதிலும் குழுக் கூட்டம் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

## 3.2 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

(அ) சுகாதார நடவடிக்கைகள், வீதி நிர்மாணம் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்பார்வை செய்வதற்காக 05 நாட்கள் விடுமுறை தின கடமைகளுக்காக விடுமுறை தின சம்பளம் பெறமுடியுமாக இருந்த போதிலும், உள்ளூராட்சி அமைச்சுச் செயலாளரின் 2000 நவம்பர் 30 ஆந் திகதிய 1/2000 ஆம் இலக்க சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு முரணாக அந்த எல்லையினை விஞ்சி 13 நாட்களுக்காக ரூபா 19,701 மீளாய்வாண்டின் போது வேலை அத்தியட்சகருக்குச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது முறையான அங்கீகாரம் பெறப்படாது சபையின் மூன்று உத்தியோகத்தர்களுக்கு 269 மணித்தியாலங்களுக்காக ரூபா 20,380 மேலதிக நேரப்படி செலுத்தப்பட்டிருந்தது.

## 3.3 ஒப்பந்த நிர்வாகம்

--------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டில் சபை நிதியத்திலிருந்து ரூபா 300,000 செலவில் கலாபுறய புறாண நாகஸ்லேன வீதிக்கு மதகு அமைத்து அபிவிருத்தி செய்தல் தொடர்பாக 2015 ஏப்ரல் 21 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட களப்பரிசோதனையின் போது ஹியூம் குழாய் முழுமையாக மூடப்படும் வகையில் வீதி அமைக்கப்பட்டு மண் நிரப்பப்படாதிருந்தமையும், பயன்படுத்தப்பட்ட சீமெந்துக் கொங்கிரீட் வெடித்திருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

(ஆ) வெளித் தரப்பினர்களுக்குரிய காணிகளில் ரூபா 3,450,000 செலவில் 02 கட்டிடங்களும், விளையாட்டரங்கு ஒன்றும் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும், அந்தக் காணியை சபைக்கு கையேற்பதற்கு மீளாய்வாண்டின் இறுதிவரையில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2014 ஆம் ஆண்டின் அபிவிருத்தி முன்மொழிவின் (மாகாண நெகும) கீழ் ரூபா 5,000,000 நிதி ஏற்பாட்டின் அடிப்படையில் சீகிரியா பொல்அத்தாவ வீதிக்கு தார் இடுவதற்குரிய ஒப்பந்தம் 3 பகுதிகளாகப் பிரித்து மூன்று ஒப்பந்தங்களாக உரிய விவசாய அமைப்புகளுடன் ஒரே மாதத்தில் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. அது அரசாங்க கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 3.9.1 ஆம் பிரிவு மற்றும் 2011 செப்தெம்பர் 27 ஆந் திகதிய 452 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு இணங்காத நிலையில் காணப்பட்டது.

## 3.4 கழிவுப் பொருள் முகாமைத்துவம்

------------------------------------------------------------

நூலக வளவில் நிர்மாணிக்கப்பட்ட கழிவுப்பொருள் மீள்சுழற்சி நிலையம் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாது தம்புள்ள பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் நாளாந்தம் சேகரிக்கப்படுகின்ற கழிவுகளை வாரத்திற்கு இரண்டு நாட்கள் வீதம் சேகரித்து திகம்பதஹ இல் அமைந்துள்ள தேக்குமர ஒதுக்கப்பகுதியில் முறையற்ற வகையில் அகற்றப்பட்டிருந்தது. கழிவுப் பொருள் தொடர்பாக முறையான மீள்சுழற்சி வேலைத் திட்டத்திற்கு தொடர்புபடுத்தப்பட்டிருக்கவில்லை.

## 3.5 தீர்க்கப்படாதுள்ள மற்றும் பதிலளிக்கப்படாத கணக்காய்வு ஐய வினாக்கள்

மீளாய்வாண்டின் போது 04 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. அந்த ஐயவினாக்களுடன் தொடர்புடைய கொடுக்கல் வாங்கல்களின் கணிப்பீடு செய்யக்கூடிய பெறுமதி ரூபா 571,589 ஆகும்.

## 4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதியில் சபையின் விஷேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) வருமான நிர்வாகம்

(ஆ) ஒப்பந்த நிர்வாகம்

(இ) வாகனக் கட்டுப்பாடு

(ஈ) கழிவுப் பொருள் முகாமைத்துவம்